இறையருள்
IRAI ARUL
THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 19 No : 5 May 2015

*Editorial Board*

*Patron*
His Excellency
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. K.J. Antony SDB**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by
**Fr. Joseph Santhosh**
**Bishop s House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay.**
**Ph:04651-252570**

உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 2 |
| Birthdays & Feastdays | 8 |
| திருத்தந்தையிடமிருந்து... | 9 |
| அருட்பணிப் பேரவை | 10 |
| நற்செய்தி நிலையம் | 12 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 15 |
| இளையோர் இயக்கம் | 16 |
| இல்வாழ்வு இயக்கம் | 18 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 23 |
| விழுதுகள்-7 | 24 |
| கல்விப் பணித்தளம் | 28 |
| இனிய இருநூறு | 29 |
| Bishop's Engagements | 32 |



## BISHOP'S MESSAGE

***Dear and Rev. Fathers,***

Greetings in the Risen Lord!

Annual Exams are over for many of our children and vacation is here. It is time for Vacation Bible School.

Vacation is a time the children are given to relax, refresh, and restart their academic duties. Then VBS is going to be another class? Nay, it is not that routine that we should begin again to send our children into classes of boredom.

Two of the disciples who had harrowing experience of the crucifixion of their master were musing over the events, talking to each other and were walking towards Emmaus. Jesus had failed. He had failed them also. What to do next? It was as if the final test and final exam had failure as the result. It was a moment of gloom and of desperation.

It was here Jesus rightly intervenes and catechises them. Just an afternoon of catechism class – their eyes were opened, they saw the truth, and they recognised him.

VBS is just the same: a moment of catechesis, a moment of walking with Jesus, a moment of revelation, a moment of recognition, and moments filled with hearts burning with love for Jesus.

**VACATION BIBLE SCHOOL (VBS)**

As you are well aware, Vacation Bible School is a specialized form of religious education for children, and in our case, it is a time to teach the Sacred Scriptures to them. Churches, irrespective of their denominations, usually hold the weeklong events during the summer vacation to deepen the religious faith of the children.

This year we shall organize Vacation Bible School from 3rd May 2015 to 15th May 2015 (any one week).

The origins of Vacation Bible School can be traced back to Hopedale, Illinois in 1894. Mrs D. T. Miles, a Sunday School teacher who also was a public school teacher, felt she was limited by time constraints in teaching the Bible to children. So, she started a daily Bible school to teach children during the summer. The first Bible school enrolled forty students and lasted four weeks. A local school was used for classes, while an adjoining park was used for recess. Later, this practice spread to other parts of the USA. Today, many Churches run their own Vacation Bible School programmes. Modern Vacation Bible School usually consists of a weeklong programme of religious education, which may employ Bible stories, religious songs, arts and crafts, skits or puppet shows which cater toward elementary school-aged children.

Our Diocese, like the other Syro-Malabar Dioceses of Kerala, has been organizing the Vacation Bible School for the past many years. Our children will spend in the Parish one week and they will be with us every day from 9.00 am to 3. 00 pm. Everyday our programme begins with the Holy Eucharist. Children are then taught the Bible and matters related to church. To make the VBS classes more interesting and profitable for the children, from this year on wards the Catechetical department of our diocese has prepared special Text books which are followed by Changanassery diocese. In the afternoon, it is time for other activities such as Bible storytelling, learning religious hymns, staging Bible skits and other entertaining programmes through which we help our children to learn the Bible. The weeklong programme normally concludes with a picnic for the children.

*I am writing extensively about the Vacation Bible School, dear Fathers, not only to remind you about it but also to exhort to take a proactive role in making it meaningful and useful for our children*. With the help of our Sisters and other lay



volunteers, you can make this event something unique for the children. The entire programme must be attractive and appealing to them. Only then will they come willingly and happily to take part and benefit from it. I request you to take the initiative and lead from the front in making it successful. I am hopeful that with your love for the Sacred Scriptures and the knowledge that you gained from your study of theology, you will be able to organize it in a creative way for the children so that they learn much from this weeklong programme.

St Jerome, who spent himself many years learning, studying and translating the Sacred Scriptures, tells us so aptly that ignorance of the Scriptures is ignorance of Jesus Christ. May our children who have been entrusted to our care may not become ignorant of Jesus Christ due to our neglect in teaching the Sacred Scriptures! May Our Blessed Mother, who pondered over the Word of God and brought forth Jesus into the world, intercede for each one of us in instilling in our children a genuine love for the Word of God, which will nourish and sustain them in moments of doubts and anxieties that crisscross their lives!

## SOME NEWS:

### 1. Silver Jubilee Celebrations of Alphonsa Nagercoil

The FCC sisters of the Alphonsa F.C convent are celebrating their Silver Jubilee of their presence on 27th April. I will be presiding over the mass on that day there. We congratulate the sisters who are working there and remember with love and gratitude all those who toiled there.

### 2. Blessing of Anayadi dispensary and nursery

The SJSM Sisters at Anayadi have begun their apostolate. The new dispensary and a Kindergarten school were blessed on 22nd April 2015.

### 3. Blessing of PHD Centre

On 24th April a centre for youth welfare of our diocese was blessed and inaugurated in the KKSSS campus. It we christened Pulari Holistic Development (PHD) training centre. I appreciate and congratulate Rev. Fr. Felix Arulnathan SDB for his dedication in mobilising the youth of our diocese and for his initiative in starting off this centre.

### 4. Examinations at St. Alphonsa College

We once again thank God and all those who worked towards the recognition and affiliation of the Alphonsa College. On 24th April the college received the set of question papers of the University for their Exams.

### 5. Conclusion of all the Board exams for students

Our students have completed their Board exams. They are awaiting their results. Let us continue to pray for them.

### 6. New Kindergarten School at Killiyoor

To strengthen our educational ministry at Killiyoor parish we have begun a Kindergarten school for the neighbourhood children who want to join the English medium school. We wish Rev. Fr. Geo Choozhikunnel all the best for this new venture. However the Tamil medium school at the campus will function as usual.

### 7. FDSHJ of Sangamam complete their ministry

The sisters of the Fervent Daughters of the Saint Heart of Jesus (FDSHJ) of Sangamam complete their ministry at Sangamam and will return to their community in Kerala. Their patient work and unstinted dedication stand out and all those who stayed at or visited Sangamam appreciate their service.

### 8. New Presence of FCC at Thadikarakonam

The FCC sisters have been visiting the Thadikarakonam mission centre from Nagaracoil community and have now decided to start a new presence there. They have begun building a new convent and the work is in progress.

### 9. New Students for Alphonsa College 2015-2016

The Alphonsa College of Arts and Science is a minority institution run by our Diocese. The members of our Diocese are definitely given preference and so I encourage you to promote students from our parishes to Alphonsa college for the year 2015-2016. Our children can be assured of quality education and follow up in a Christian environment and dedicated staff.

### 10. Visit of German students

Seven young students from Germany had come over to our Diocese for work experience program. They arrived on 14th March and were with us till 9th of May.

### 11. Ordinations to Priesthood

I am very glad and I thank God profusely for gifting us with eight new priests for our diocese this year. Seven of them were ordained in April in the Easter week. We congratulate the newly ordained priests,

a. Rev. Fr. Abraham Puthenpurackal (Shoji) ordained at Pacha- Chekkidikadu on 6th April
b. Rev. Fr. Thomas Attiyil (Ajeesh) ordained at Kulipura, on 6th April
c. Rev. Fr. Jose Vayalil ordained at Pooyamkuty on 7th April
d. Rev. Fr. Joseph Kurias (Printo) ordained at Mankulam on 8th April
e. Rev. Fr. James Kanakalil (Vinod) ordained at Mavady, on 9th April
f. Rev. Fr. Thomas Poovathummottil (Abin) ordained at Manjapetty on 9th April

g. Dn. George Valliyamthadathil (Sumesh) ordained at Kanayankavayal on 11th April

I also thank all the fathers from our diocese who took great pains to go and participate in these ordinations.

**SOME INFORMATION**

**1. Constructions:**

a. Construction of Mezhacode church is in progress
b. Christurajapuram church is nearing its completion
c. In Padanthalumoodu the entrance of the school is given a facelift with a new pious Articles Shop, a Kurusady and new entrance
d. Alphonsa College, Soosaipuram: The two-floor structure is nearing completion.
e. Alphonsa School, Nagarcoil: The work of an additional floor at the main building is on and a new building for CBSE school has been begun.

**2. Upcoming programs:**

a. On 12th May will be the Priests conference at Malaicode and at 2.00pm Holy Qurbana will be celebrated by our new priests.
b. Inter-diocesan meet will be held on 28th May at KKSSS. I ask all the heads of departments to be present without fail.

**IN CONCLUSION**

Faith is a gift. But it is a gift that is shared among believers, and shared with those who have not yet heard of it. Those who have already heard and accepted it strengthen it by living it day by day. We priests are supposed to be persons strong in our faith. If our gift of faith is not shared through our life, works and through our teachings, then it is as good as dead.



VBS is a moment critical to our Christian community wherein we priests can play our significant role as pastors who have lived their faith and who share it with the young generations that are waiting to experience the new life in the Risen Lord.

Wish you all a fruitful time of animation and happiness through VBS.

Yours in the Risen Christ,
**+ George Rajendran SDB**
Bishop of Thuckalay

## BIRTHDAY S OF REV. FATHERS

| | |
|---|---|
| REV. FR. TOBIN ALAPURACKAL | 2 |
| REV. FR. TONY VELIKKATHU | 6 |
| REV. FR. DAVIS KARUKAPPALLY CMI | 10 |
| REV. FR. JOHNPAUL PUTHUVALPUTHEN | 17 |
| REV. FR. JINOY THOMAS | 24 |
| REV. FR. THOMAS KOIPURAM | 25 |
| REV. FR. JOSHY KULUTHUMKAL | 28 |
| REV. FR. SIJI PUTHENVELIYIL CMI | 29 |
| REV. FR. TINU KOTTACKAPARAMBIL CMI | 29 |

**FEASTDAY**

| | |
|---|---|
| REV. FR. ALEX PUTHETTU | 3 |

# வரலாறும், பணியும் கிறிஸ்தவத்தை இவ்வுலகிற்கு அடையாளம் காட்டும் இரு கூறுகள் என்று திருத்தந்தை பிரான்சிஸ்

வரலாறும், பணியும் கிறிஸ்தவத்தை இவ்வுலகிற்கு அடையாளம் காட்டும் இரு கூறுகள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்ரல் 30 வியாழன் காலை, சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் ஆற்றிய மறையுரையில் குறிப்பிட்டார். புனிதர்களான பேதுருவும் பவுலும், மக்களின் வரலாற்றில் ஊன்றிய இயேசுவை மக்களுக்கு அறிவித்தனர் என்றும், வரலாற்றில் நுழைந்த கடவுள், இன்றும் தன் மக்களோடு பயணிக்கிறார் என்று விளக்கினார்.



வரலாற்றில் ஊன்றாமல், மக்களோடு இவ்வுலகப் பயணத்தில் பங்கேற்காமல் ஒரு கிறிஸ்தவரால் வாழமுடியாது என்றும், தான் தனது என்ற சுவர்களுக்குள் அமைக்கப்பட்ட ஓர் ஆய்வுக் கூடத்திலிருந்து வெளிவரும் பொருளாக கிறிஸ்தவர்கள் வாழ்வது கிடையாது என்றும் வலியுறுத்தி கிறிஸ்தவ வரலாறு, அருளின் வரலாறு எனினும், அது பாவத்தின் வரலாறாகவும் இருந்தது என்பதை திருத்தூதர் பவுல், மன்னன் தாவீதின் வாழ்விலிருந்து தரும் விளக்கம் வெளிப்படுத்துகிறது என்று, கிறிஸ்தவ வரலாற்றைக் குறித்து விளக்கினார் திருத்தந்தை.

சீடர்களின் காலடிகளை இயேசு கழுவிய நிகழ்வு, இன்றைய நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, பணிபுரிதல் கிறிஸ்தவ வாழ்வின் மற்றொரு முக்கிய அடையாளம் என்று எடுத்துரைத்து என்னுடைய வாழ்வில், மற்றவர்களை, நான் வாழும் சமுதாயத்தை, பங்குத்தளத்தை, என் சொந்த ஆதாயத்திற்காக பயன்படுத்துகிறேனா அல்லது, அவர்களுக்கு என்னால் இயன்ற அளவு பணிகள் புரிகிறேனா என்ற கேள்வியுடன் திருத்தந்தை தன் மறையுரையை நிறைவு செய்தார்.

மேலும், "மிகக் கடுமையான பல பிரச்சனைகளின் நடுவே, இறைவனின் அளவற்ற கருணையின் பேரில் நாம் கொள்ளும் நம்பிக்கையை இழக்காமல் இருப்போமாக" என்ற வார்த்தைகள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் Twitter செய்தியாக இவ்வியாழன் வெளியாயின.

*ஆதாரம் - **வத்திக்கான் வானொலி***



# அருட்பணிப்பேரவை

தக்கலை மறைமாவட்ட 4-ஆம் அருட்பணிப் பேரவையின் 5-ஆம் அமர்வு தக்கலை சங்கமத்தில் 15.01.2015 அன்று ஆயர் தலைமையில் நடைபெற்றது. அருட்திரு. பெலிக்ஸ் அடிகள் தலைமையில் நடைபெற்ற இறைவேண்டலுக்குப்பின் பேரவைச்செயலர் அருட்திரு. மிஜோ புத்தன்புரைக்கல் அடிகளார் அனைவரையும் வரவேற்றார். பேரவை இணைச்செயலர் ஜான் அறிக்கை சமர்ப்பிக்க அறிக்கை ஏற்றுகொள்ளப்பட்டது. வழிபாட்டுக்குழு, இல்வாழ்வுக்குழு, இளைஞர் திருத்தொண்டுக்குழு, கல்விக்குழு, திருத்தொண்டுக்குழு, சமூகச்சேவைக்குழு, சமுக உறவுக்குழு ஆகிய பேரவைக்குழுக்கள் தத்தம் அறிக்கைகளை சமர்ப்பித்தன. அறிக்கைகள் மீது விவாதம் நடைபெற்றன. மறைக்கல்விக்குழு தன் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

தேநீர் இடைவேளைக்குப்பின் அருட்திரு டோம் குந்நும்புறம் அடிகளார் "என் பங்கு என் மறைமாவட்டம், என் கடமைகளும் ஈடுபாடும்" பற்றி உரையாற்றினார்கள். என் உள்ளத்திற்கேற்ற ஆடுகளாக நீங்கள் மாறவேண்டும் என்ற இறை வசனத்தோடு தொடங்கிய அவரது உரை பங்குகளில் குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினரின் பணிகளை விவரிப்பதாக இருந்தது.



ஆயர் அவர்கள் தம் உரையின்போது நாம் ஒவ்வொருவரும் நம் பங்குகளில் நாம் செய்யும் பணிகள் பற்றி சுயசோதனை செய்ய வேண்டும், குருக்கள் பங்குகளில் ஆயரின் பணியைச் செய்ய கடமைப்பட்டுள்ளனர், பங்குகளில் பங்குத்தந்தையோடு இணைந்து செயலாற்றுவோர், எப்போதாவது இணைந்து செயலாற்றுவோர், ஆராதனைகளுக்கு மட்டும் வருவோர் என மூவகையினர் உள்ளனர். அதில் இரண்டு மற்றும் மூன்றாம் வகையில் இருப்போர் முதல் நிலைக்கு வரவேண்டும், தன் கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற காரணத்தால் ஒருவரும் ஒதுங்கி இருத்தல் கூடாது ஆகிய கருத்துகளை வலிவுறுத்தினார்கள்.

ஆயர் உரைக்குப்பின்னர் பொது விவாதம் தொடங்கியது. பெரும்பாலான உறுப்பினர்கள் இவ்விவாதத்தில் கலந்துகொண்டனர். பங்குகளில் பொதுநிலையினரின் ஈடுபாட்டை அதிகரிக்க பல்வேறு

ஆலோசனைகளை உறுப்பினர்கள் வழங்கினர். உணவு இடைவேளைக்குப் பின்னரும் தொடர்ந்த இவ்விவாதம் பிற்பகல் 2.45 வரை நீடித்தது.

அருட்திரு. பெலிக்ஸ் அடிகளார் அர்ப்பண ஆண்டு பற்றிய தகவல்களைக் கூறினார்கள். அருட்திரு. ஜோசப் அடிகளார் குடும்ப ஆண்டு பற்றிய தகவல்களை சமர்ப்பித்தார்கள். புனித அல்போன்சா கல்லூரி பற்றிய தகவல்களை அருட்திரு. தாமஸ் அடிகளார் விளக்கினார்கள். பின்னர் அருட்திருவாளர்கள் மிஜோ, பெலிக்ஸ், ஆன்றணிஜோஸ், ஜோண்ஸ்லால் மற்றும் திருவாளர்கள் சௌந்தர்ராஜ், கிறிஸ்துதாஸ், எட்வின்சன், மணிவண்ணன், திருமதி பெனிலா செல்வன் என ஒன்பது பேர் கொண்ட நிரல் குழு (அஜெண்டா குழு) தேர்ந்தெடுக்கப்பட்டது.

கேள்வி நேரத்திற்குப்பின்னர் ஆயர் மற்றும் பேரவைச செயலர் தந்தையின் அறிவிப்புகள், திரு. கிறிஸ்துதாஸ் அவர்களின் நன்றி கூறல், ஆயரின் இறுதி ஆசீரோடு பேரவைக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

**தீர்மானங்கள்:**

1. வழிபாட்டுக்குழு உருவாக்கியுள்ள ஒருங்கிணைந்த வழிபாட்டு செயல் திட்டத்தை அனைத்துப் பங்குகளும் நடைமுறைப் படுத்த வேண்டும்.
2. பேரவைக் குழுக்கள் தவறாது கூட வேண்டும். அவற்றை கூட்ட வேண்டிய பொறுப்பு குழுக்களின் செயலர்களைச் சார்ந்தது.
3. பங்குகளிடையே கருத்துவேறுபாடுகள் எழும்போது சம்பந்தப்பட்ட பங்குகள் தத்தம் பிரச்சனைகளை சமூக உறவுக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.
4. பிப்ரவரி 2015 - க்குள் அனைத்து பங்குகளிலும் தந்தையர் நல்வாழ்வு இயக்கத்தைத் தொடங்கவேண்டும். பங்குத் தந்தையர்கள் இதில் அக்கறை காட்ட வேண்டும்.
5. பங்குப் பேரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அந்தந்த பங்கைச் சார்ந்த அருட்பணிப் பேரவை உறுப்பினர்களுக்கு அழைப்பு கொடுக்க வேண்டும்.
6. அர்ப்பண ஆண்டு சிறப்புற அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
7. கருத்து வேறுபாடுகள் மறந்து அனைவரும் ஒன்றாய் பங்கு மற்றும் மறைமாவட்டத்தின் வளர்ச்சியில் பங்கு கொள்ள வேண்டும்.

அருட்தந்தை **மிஜோ புத்தன்புரையில்**
செயலர்.



# நற்செய்தி நிலையம்

"கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்," (எபேசியர் 4:24)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

## தலைமையாசிரியர்களின் கூடுகை :

மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூடுகை ஏப்ரல் மாதம் 18-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்கள் ஆயர் மற்றும் தலைமையாசிரியர்களை வரவேற்று உரை நிகழ்த்தினார். இக்கூடுகையின் போது மறைக்கல்வி நிலையங்களின் நிறைகுறைகளைப் பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஆயர் அவர்கள் திருவழிபாடு திருச்சபைக்கு முக்கியமானது, அதைப் பற்றி ஆழ்ந்த அறிவு மாணவர்களுக்கு வேண்டும். இறை அனுபவம் கிடைக்க வேண்டும். ஆசிரியர்கள் இளம் தலைமுறைக்கு திருவழிபாட்டின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அதற்காக ஆசிரியர்களுக்கும் திருவழிபாட்டை பற்றிய கருத்தரங்குகள் நடத்துவோம் என்று கூறினார். மேலும் அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் ஒரு வாரம் VBS பயிற்சி வகுப்புகள் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும். 7 நாட்கள் இளையோர்கள் நம்முடன் இருக்கிறார்கள். ஆதலால் ஆசிரியர்கள் தகுந்த முறையில் தயார் செய்த பின் தான் வகுப்புகள் மாணவர்களுக்கு நடத்த வேண்டும் என்றும் கூறினார். தலைமையாசிரியர் ஷோனிக் நீகன் அவர்கள் ஆயர் அவர்களுக்கு நன்றி கூறினார். இக்கூடுகையின் போது இரண்டாம் பருவத் தேர்வுக்கான வினாத்தாள்கள் வழங்கப்பட்டன.

## ஊக்குவிப்பாளர்களின் கூடுகை :

மறைக்கல்வி ஊக்குவிப்பாளர்களின் கூடுகை ஏப்ரல் மாதம் 18-ம் தேதி சனிக்கிழமை அன்று 6.30 மணிக்கு தக்கலை சங்கமத்தில் வைத்து பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூடுகையின் போது மே மாதம் 4-ம் தேதி நடக்கும் அருட்பணிப்பேரவையில் முக்கிய கருத்தாக மறைக்கல்வியை

எடுத்திருப்பதால் மறைக்கல்வியின் தற்போதைய நிலைமையைப் பற்றியும் கலந்தாலோசித்தனர். ஆயர் அவர்களின் பிரசன்னம் இக்கூடுகையை மேன்மேலும் ஊக்கப்படுத்தும் வண்ணம் அமைந்திருந்தது.

## விடுமுறை விவிலியப் பள்ளி (VBS)

VBS பாடமுறை நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு முதல் தமிழ் மாணவர்களுக்கு திண்டிவனத்தில் வெளியிடப்படும் பாடத்திட்டமும் மலையாள மாணவர்களுக்கு சங்ஙனாச்சேரி சந்நேச நிலையம் வெளியிடும் பாடத்திட்டமும் கடந்த ஆண்டு வரை பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆண்டு சந்நேச நிலையம் வெளியிட்ட VBS பாடநூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான பாடநூல்கள் வழங்கப்பட்டன. இம்முயற்சி மறைக்கல்வியின் வளர்ச்சியை இன்னும் அதிகமாக மேன்மைப்படுத்துகிறது.

ஆசிரியர்களுக்கான VBS பயிற்சியின் துவக்க விழாவானது காலை 10 மணியளவில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இயக்குநர் தந்தை அவர்கள் பயிற்சிக்கு வருகை தந்த அருட்தந்தையர்களையும், தலைமை ஆசிரியர்களையும், ஆசிரியர்களையும் வரவேற்றார். நமது குருகுல முதல்வர் அவர்கள் மாணவர்களுக்கு சிறந்த முறையில் VBS நடத்திட வேண்டும் என்று தனது உரையில் கூறினார். தமிழாக்கம் செய்யப்பட்டதையும் , பாடநூல்கள் நான்கு ஆயர் அவர்கள் வெளியிட முதல் பிரதியை திரு மரியதாஸ் ஆசிரியர் அவர்கள் பெற்றுக்கொண்டார். அருட்சகோதரர் ஜஸ்டின் தலைமையில் நமது மறைமாவட்டத்திலுள்ள அருட்சகோதரர்கள் VBS பயிற்சியை ஆடல் பாடல்கள் விளையாட்டுக்கள் வழியாக மேன்மைப்படுத்தினார்கள். ஒவ்வொரு குழுவிலும் வகுப்புகள் நடத்த ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்த அருட்தந்தை ஷோஜோ, அருட்தந்தை. டென்சி, அருட்தந்தை அலக்ஸ், அருட்சகோதரி லாசர் SH, அருட்சகோதரி பிளஸ்ஸி CMC, அருட்சகோதரர் ரிட்டோ ஆகியோர் சங்ஙனாச்சேரி மறைக்கல்வி நிலையத்திலிருந்து பயிற்சி பெற்றவர்கள்





என்பது குறிப்பிடத்தக்கது. புதிய VBS பாடநூல்கள் வெளியிட உதவிய ஒவ்வொரு நல்ல உள்ளங்களுக்கும், குறிப்பாக அயராது உழைத்த திரு. மரியதாஸ் ஆசிரியர் அவர்களுக்கும் மறைக்கல்வி நிலையத்தின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்றைய தினம் நமது ஆயர் அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் திருவிழாவும், பிறந்த நாள் விழாவும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. குருக்களின் சார்பாக பேரருட்தந்தை. லூக்கா கொல்லம்பறம்பில் அவர்களும் ஆசிரியர்களின் சார்பாக ஊக்குவிப்பாளர். திரு. செல்வன் அவர்களும் வாழ்த்துரை கூறினர்.

## இரண்டாம் பருவத் தேர்வு :

மறைக்கல்வி மாணவர்களின் இரண்டாம் பருவத் தேர்வு (Std. $^1/_2$ - Std IX) ஏப்ரல் மாதம் 19-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

Std X, XI, XII ஆகிய மாணவர்களுக்கான II ஆம் பருவத் தேர்வு ஏப்ரல் மாதம் 26-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஒவ்வொரு மறைவட்ட ஆலயங்களில் வைத்து நடைபெற்றது.

## தகவல்கள் :

1. மறைக்கல்வி மாணவர்களுக்கான போட்டித் தேர்வு மே மாதம் 10-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2 மணிக்கு படந்தாலுமூட்டில் வைத்து நடைபெறும்.
2. வகுப்பு X, XII ஆகிய மாணவர்களுக்கான Re-Exam ஜூன் மாதம் 21-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு படந்தாலுமூட்டில் வைத்து நடைபெறும்.
3. புதிய மறைக்கல்வி வகுப்புகள் மே மாதம் 31-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஆரம்பமாகும்.
4. தலைமையாசிரியர்களின் கூடுகை ஜூன் மாதம் 7-ஆம் தேதி சனிக்கிழமை அன்று 2.30 மணிக்கு மறைக்கல்வி அலுவலகம் கல்லுவிளையில் நடைபெறும்.
5. மறைக்கல்வி ஆண்டு விழா ஜூன் மாதம் 13-ம் தேதி சனிக்கிழமை அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அருட்தந்தை **ஜெஸ்டின் செறுவேலில்**
இயக்குநர்

# குழந்தை ஈசோ இயக்கம்

"இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும்,
மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக். 2:52)

**ஈசோ மிசிகாவில் அன்புக்குரிய குழந்தைகளே!**

விடுமுறைகாலம் நமக்கு வசந்தத்தின் காலம்; இந்த நாட்களை வீணாகக் கழிக்காமல், நல்ல, பயனுள்ள நாட்களாக மாற்ற வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இயேசு பெற்றோருக்குக் கீழ்படிந்தது போல நாமும் இந்நாட்களில் நம் பெற்றோரோடு அதிக நேரம் செலவிட்டு, அவர்களுக்கு நாம் கீழ்படிந்து, சிறு சிறு உதவிகள் செய்து நம் பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்தவேண்டும்.

நம் பெற்றோரோடும், உறவினரோடும் மட்டுமல்லாது நம்மைப் படைத்த இறைவனோடு அதிக நேரம் செலவிட வேண்டும். தினமும் திருப்பலியில் கலந்து கொண்டு, செபமாலை செய்து நம் இறைவனோடும், அன்னையாம் கன்னிமரியாவோடும் சேர்ந்து நம் நேரங்களை பயனுள்ளதாக்குவோம், அகமகிழ்ச்சியடைவோம்.

அருட்தந்தை **ஜோமோன் மங்கலாமடத்தில்**
இயக்குநர்

## எழுபதாம் அகவை வாழ்த்து...



எளிமையால் எல்லோரையும் ஈர்த்து
எளியோர்க்கு எல்லாமுமாய் தீர்ந்து
எத்திக்கும் இயன்றவரை செய்து
எம்மில் ஒருவரான எமதாயரே!

உம் பணி தக்கலையில் உயர்வானது
உணர்ந்த தனயனும் உமையழைத்து
உயர்ந்த தலைமையிடம் உமையமர்த்தி
உலகறியும் தலைவராய் உயர்த்தினாரே!

**எழுபதாம் அகவையும்** எட்டிட்ட - நீவிர்
எளிதாய் நூறையும் அடைந்திட
எல்லா உயர்வும் இறையீந்திட
என்றும் இறைஞ்சுவோம் இறையிடம்

நன்றியுடன்.... தக்கலை மறைமாவட்டம்



# தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கம்

## 6 நாட்களில் ஆங்கிலம்

10 ஆம் வகுப்பு முடித்த மாணவச் செல்வங்களுக்கு 6 நாட்கள் ஆங்கில சிறப்புப் பயிற்சி முகாம் 19 ஏப்ரல் 2015 மாலை 4 மணிக்கு தக்கலை சங்கமத்தில் வைத்து அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் 11 மாணவிகள் பங்கு பெற்றனர். அருட்தந்தை பெலிக்ஸ் மற்றும் ஆசிரியர் திரு. ஆரோக்கிய சூசை ஆகிய இருவரும் மாணவர்கள் எளிய முறையில் சிரமமின்றி கற்க, விளையாட்டுகள் மூலமாகவும் Video மற்றும் Audio வழியாக சிறப்புப் பயிற்சிகளை காலை 6 மணி முதல் இரவு 10.30 மணி வரை தொடர் பயிற்சியாக 6 நாட்கள் நடத்தி மாணவிகளை ஊக்கப்படுத்தினர். மாணவிகளும் ஒவ்வொரு நாளும் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள் வாயிலாக குறிப்பாக கதை சொல்லுதல், பட்டிமன்றம், கலந்துரையாடல் மற்றும் ஆங்கில இரவு ஆகியவற்றின் மூலம் தங்களுடைய ஆங்கிலப் புலமையை வெளிக்காட்டினார்கள். இறுதி நாளில் பெற்றோர்களும் கலந்து கொண்டு தங்களுடைய பிள்ளைகளின் ஆங்கிலப் புலமையை கண்டு வியந்து பாராட்டி சென்றது மிகவும் பாராட்டுக்குரியது. இப்பயிற்சி 25 ஏப்ரல் மாலை 5 மணியளவில் இறுதி ஜெபத்துடன் நிறைவடைந்தது.



## Pulari Holistic Development Training Centre திறப்பு விழா

தக்கலை மறைமாவட்ட இளையோர்களின் மேம்பாட்டை கருத்தில் கொண்டு, சிறப்பு பயிற்சி மற்றும் கருத்தரங்கு நடத்திடவும், இளையோர்கள் வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை சிறந்த முறையில் பெற்றிடவும், கணிணி மற்றும் ஊடகப் பயன்பாட்டில் தங்களை உயர்த்திக் கொள்ள PHD பயிற்சிமையமானது KKSSS Campus -ல் தொடங்கப்பட்டுள்ளது. இப்புதிய பயிற்சி மையத்தை ஆயர் மார் ஜார்ஜ்



ராஜேந்திரன் அவர்கள் 24 ஏப்ரல் 2015, வெள்ளிக்கிழமை 1 மணியளவில் அர்ச்சித்து திறந்து வைத்தார்கள். இவ்விழாவில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், இறைமக்கள் மற்றும் இளையோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இறுதியாக இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் ஆயர், குருகுல முதல்வர் ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் விருந்தினருக்கு நன்றியினை தெரிவித்தார்கள். இளையோர் சார்பாக ஆயர் அவர்களுக்கு பெயர் கொண்ட திருநாள் வாழ்த்துக்களை பாடல் பாடி தெரிவித்தனர்.

**ஊடக கருவிகள் அர்ச்சிப்பு விழா**

இளையோர் கணிணி மற்றும் ஊடக பயன்பாட்டில் சிறந் தோங்க, புதிய ஊடக கருவிகளை குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், அவர்கள் 30 ஏப்ரல் மதியம் 1 மணி அளவில் சிறப்பு



செபம் செய்து அர்ச்சித்தார்கள். இவ்விழாவில் பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் 14 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இறுதியாக இயக்குநர் தந்தை பெலிக்ஸ் அவர்கள் நன்றி கூறி வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

**கணிணி மற்றும்** Video Documentation and Film making **பயிற்சி**

இளையோர்கள் கணிணி பயன்பாட்டிலும், ஊடக யுக்தியிலும்



சிறந்து விளங்க 5 நாட்கள் கொண்ட சிறப்பு கணிணி மற்றும் ஊடகத்தை கையாளும் முறையை ஏப்ரல் 27 முதல் மே 1 வரை அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் கல்லுவிளை PHD பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் 14 மாணவ மாணவியர் பங்கேற்று Adobe Photoshop, Basics of Photography and Videography, Camera Handling ஆகியவற்றை கற்றுக்கொண்டனர். திருச்சி, தொன்போஸ்கோ அலைகள் மீடியா கல்லூரி பேராசிரியர்களால் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்டது. இறுதி நாளில் மாணவர்களே கதை ஒன்றை தயாரித்து, அதை குறும்படமாக எடுத்தது மிக்க மகிழ்சிக்குரிய சாதனையாகும்.

அருட்தந்தை ***பெலிக்ஸ்*** SDB, இயக்குநர்.



# FAMILY APOSTLATE

1. **Kalluvilai Centre :** ചൊവ്വാ, ബുധൻ, വ്യാഴം ദിവസങ്ങളിൽ കല്ലുവിള ഫാമിലി അപ്പസ്റ്റോലേറ്റ് സെന്ററിൽ മദ്യപാനികൾക്കും ചികിത്സ മനോരോഗികൾക്കും ചികിത്സ, ഫാമിലി കൗൺസിലിംഗ് എന്നിവ നടക്കുന്നു. ചൊവ്വാഴ്ച ഡോക്ടറുടെ സേവനം ലഭ്യമാണ്.

2. **Pre-Marriage Guidance Course :** മാർച്ച് മാസത്തിലെ course-ൽ 28 പേർ പങ്കെടുത്തു. പ്രഗത്ഭരായവർ ക്ലാസ്സുകൾ നയിച്ചു. അടുത്ത Course May 15, 16, 17 ദിവസങ്ങളിൽ സംഗമത്തിൽ വച്ച് നടക്കും. വെള്ളിയാഴ്ച 4 P.m. ന് ആരംഭിച്ച് ഞായർ 4 p.m. ന് അവസാനിക്കും. Course Fee 500 രൂപ.

3. **Mathru Jyoths :** മെയ് മാസ പഠന വിഷയം പരി. കന്യകാമറിയത്തിന്റെ സന്ദർശന തിരുനാൾ (മെയ് 31)

-മറിയം ശുശ്രൂഷയുടെ മാതൃക
- മറിയം സമ്മാനമായി ഒന്നും കൊണ്ടുപോയില്ല. യേശുവിനെ കൊണ്ടുപോയി
- ഒരു നല്ല അയൽക്കാരിയുടെ ഗുണങ്ങൾ

ദൗത്യം : മാതൃ ജ്യോതിസ് അംഗങ്ങളുടെ വീടുകൾ സന്ദർശിച്ച് പ്രാർത്ഥിക്കുക.

മത്സരം : ഒരാൾ മറിയവും, ഒരാൾ എലിസബത്തുമായി മറിയത്തിന്റെ സന്ദർശന ഭാഗം അഭിനയിക്കുക.

പുതിയ യൂണിറ്റ് :മാലൈക്കോട് ഹോളി ക്രോസ് ചർച്ച് യൂണിറ്റ്

4. **Thanthayar Nalavazhvu Ekkam :** പിതാക്കന്മാരുടെ സംഘടനയായ തന്തയർ നൽവാഴ്‌വ് ഇയക്കത്തിന്റെ മാർഗ്ഗരേഖയും, നിർദ്ദേശങ്ങളുമടങ്ങിയ കത്ത് എല്ലാ പങ്ക് തന്തമാർക്കും അയച്ചിട്ടുണ്ട്. അതിൻ പ്രകാരം പങ്കുകളിൽ ഈ ഭക്ത ഇയക്കം തുടങ്ങണമെന്ന് സ്നേഹ പൂർവ്വം ഓർപ്പിക്കുന്നു. തുടങ്ങുന്ന പങ്കുകൾ അറിയിക്കുക.

ഇറൈ അരുളിൽ ഇടുന്നതായിരിക്കും. പുതിയ യൂണിറ്റ് - മാലൈക്കോട് ഹോളി ക്രോസ് ചർച്ച് യൂണിറ്റ്

**Vanthu Parunkal Prayer Unit : Ist IInd IIIrd Saturday** - കളിൽ യഥാക്രമം പ്ലാങ്കാല FCC കോൺവെന്റിലും, പളുകൽ ചർച്ചിലും, പാലപ്പള്ളം ചർച്ചിലും ഏകദിന ധ്യാനം നടക്കുന്നു. ജപമാല, വി. കുർബ്ബാന, വചന പ്രഘോഷണം, ആരാധന, സൗഖ്യ ശുശ്രൂഷ, കുമ്പസാരം, സ്നേഹവിരുന്ന് എന്നിവ നടക്കുന്നു.

സാക്ഷ്യം : 6 വർഷം മക്കളില്ലാതിരുന്ന മരിയാത്തുതം അരുമനക്ക് പ്രാർത്ഥനയിലൂടെ ആൺ കുഞ്ഞിനെ ലഭിച്ചു.

**Desamsa Club :** ഏപ്രിൽ മാസം club യോഗം വസന്തകുമാർ പളുകലിന്റെ ഭവനത്തിൽ നടന്നു. ദശാംശമായി ലഭിച്ച 11270 രൂപ പളുകൽ ചർച്ചിന്റെ പുനർനിർമ്മാണത്തിനായി വികാരി. Fr. Mathew Thekkekkutt - നെ ഏൽപ്പിച്ചു. മെയ് മാസ club യോഗം വിൽസൺ മഞ്ചാലുമൂടിന്റെ ഭവനത്തിൽ മെയ് 10 ഞായർ വൈകുന്നേരം 6 ന് നടക്കും. താത്പര്യമുള്ളവരെ club - ൽ അംഗങ്ങളാകാൻ ക്ഷണിക്കുന്നു.

| | | |
|---|---|---|
| പേര് | : | "തന്തയർ നൽവാഴ്വ് ഇയക്കം" |
| മുദ്രവാക്യം | : | കുടുംബത്തിലൂടെ ലോകത്തെ നവീകരിക്കുക. |
| ആദർശ വാക്യം | : | "ഞാൻ അവിടുത്തേക്കായി ജീവിക്കും. എന്റെ മക്കൾ അവിടുത്തേക്ക് സേവനം ചെയ്യും" (സങ്കീ. 22/30) |
| പ്രവർത്തന ശൈലി | : | ക്ഷമിച്ചും, സഹിച്ചും, സ്നേഹിച്ചും, അദ്ധ്വാനിച്ചും, പ്രാർത്ഥിച്ചും മുന്നേറുക. |
| അംഗങ്ങൾ | : | സഭാനിയമ പ്രകാരം വിവാഹിതരായ പിതാക്കന്മാരുടെ സംഘടന. |
| സംഘടന സംവിധാനം | : | ആവശ്യമായ ഭാരവാഹികളെ തിരഞ്ഞെടുക്കുക. അവർ ചർച്ചിലെ സ്ഥിരാംഗങ്ങൾ ആയിരിക്കണം. |
| മദ്ധ്യസ്ഥൻ | : | തൊഴിലാളി മദ്ധ്യസ്ഥനായ വി. യൗസേപ്പ് |
| തിരുനാൾ ദിവസം | : | മെയ് 1 |
| പ്രവർത്തന വർഷം | : | മെയ് 1 മുതൽ ഏപ്രിൽ 30 വരെ |



| | | |
|---|---|---|
| വാർഷീക ആഘോഷം | : | മെയ് 1 |
| എമ്പ്ളം | : | ഭൂലോകത്തിന്റെ പശ്ചാത്തലത്തിൽ കുടുംബത്തിന്റെ ചിത്രം, സ്ത്രീയുടെ കൈയ്യിൽ ദീപം, പുരുഷന്റെ കയ്യിൽ പണിയായുധം. |
| പതാക | : | 31/2 ꞉ 21/2 വെള്ളതുണി, നടുവിൽ എമ്പ്ളം, പേരു, രൂപത, മുദ്രവാക്യം |
| റിക്കാർഡുകൾ | : | അംഗത്വരജിസ്റ്റർ, ഹാജർ ബുക്ക്, മിനിറ്റ്സ് ബുക്ക്, റിപ്പോർട്ട് ബുക്ക് Account Book, നിയമാവലി, രസീത് ബുക്ക്, സന്ദർശക ഡയറി, ആൽബം, ഫയലുകൾ |

## ലക്ഷ്യങ്ങൾ

- ഒരു ഉത്തമ കത്തോലിക്ക കുടുംബനാഥനെ രൂപപ്പെടുത്തുക.
- മദ്യപാനം, ലഹരി ഉപയോഗം, ചീത്ത കൂട്ടുകെട്ട് ഇവയിൽ നിന്ന് കുടുംബ നാഥന്മാരെ വിടുവിക്കുക.
- സാമൂഹ്യ, സാംസ്ക്കാരീക, രാഷ്ട്രീയ മണ്ഡലങ്ങളിൽ പ്രവർത്തിക്കുന്നവരെ ക്രിസ്തുവിന് സാക്ഷ്യം വഹിക്കുന്നവരാക്കി ത്തീർക്കുക.
- ആത്മീയവും, ഭൗതീകവുമായി തകർന്ന കുടുംബങ്ങളെ രക്ഷയി ലേക്ക് കൊണ്ടുവരിക.
- യാതൊരു രാഷ്ട്രിയ ലക്ഷ്യങ്ങളുമില്ലാതെ സമൂഹ നന്മക്കായി പ്രവർത്തിക്കുക.
- കുടുംബ പ്രാർത്ഥന, ഞായറാഴ്ച ആചരണം, കൂദാശ സ്വീകരണം ഇവയിൽ നിഷ്ഠയുള്ളവരാക്കുക.
- ശരിയായ വിശ്വാസ കൈമാറ്റം അടുത്ത തലമുറക്ക് കൈമാറാൻ ദമ്പതികളെ പ്രാപ്തരാക്കുക.

## പ്രവർത്തനങ്ങൾ, കർമ്മപരിപാടികൾ

- കുടുംബ പ്രാർത്ഥന മുടക്കം കൂടാതെ നടത്തുക, നേതൃത്വം കൊടുക്കുക.
- ഒരു ക്രൈസ്ത പ്രസിദ്ധീകരണമെങ്കിലും കുടുംബത്തിൽ വരുത്തുക.
- മദ്യ ലഹരി വിരുദ്ധ പ്രവർത്തനങ്ങൾ ശക്തമാക്കുക.
- ജീവന്റെ കാവൽക്കാരായി മാറുക.
- വിവാഹ ധൂർത്ത്, ആഡംബരങ്ങൾ ഇവ ഉപേക്ഷിക്കുക.
- ദശാംശം നല്ല കാര്യങ്ങൾക്കായി ഉപയോഗിക്കുക.

- വ്യക്തി വിദ്വേഷങ്ങൾ, കുടുംബ വൈരാഗ്യങ്ങൾ ഉപേക്ഷിക്കുക.
- മുഴുവൻ കുർബ്ബാനയിൽ പങ്കുചേരുക. മാസത്തിൽ ഒരിക്കൽ കുമ്പസാരിക്കുക.
- ദൈവത്തിന്റെ പിതൃത്വത്തെ ഈ ഭൂമിയിൽ വെളിപ്പെടുത്തുന്ന അപ്പനാവുക.
- മക്കളുടെ വിശ്വാസ പരിശീലനത്തിൽ കാര്യമായി ശ്രദ്ധിക്കുക.
- ഇടവകയിലെ മറ്റു വിഭാഗങ്ങളുമായി സമ്പർക്കം പുലർത്തുക.
- അപകടം, രോഗം, മഴകെടുതികൾ ഇവയിൽ അടിയന്തര സഹായം എത്തിക്കുക.
- ദമ്പതീ ടൂർ, തീർത്ഥാടനം ഇവ സംഘടിപ്പിക്കുക.
- രക്ത ദാന അവയവദാന പ്രസ്ഥാനങ്ങളിൽ പങ്കുചേരുക.
- കൂലിയില്ലാതെ പരസ്പരം ജോലികൾ സഹകരിച്ചു ചെയ്യുക.

## മീറ്റിംഗ് ക്രമം

- മാസത്തിൽ ഒരു ഞായറാഴ്ച വൈകിട്ട് 6 മണിക്ക് കൂട്ടം നടത്തുന്നു.
- ചർച്ചിലോ ഏതെങ്കിലും അംഗത്തിന്റെ വീട്ടിലോ നടത്താം.
- മേശമേൽ ബൈബിൾ, തിരികൾ, പൂക്കൾ, വി. യൗസേപ്പിന്റെ ചിത്രം, കാണിക്കപാത്രം.
- തിരി തെളിക്കുന്ന. പരി. ആത്മ ഗാനം ആലപിക്കുന്നു.
- ആരാധന, സ്തുതി പ്രാർത്ഥനകൾ, സങ്കീർത്തനം 127, 128
- സുവിശേഷ വായന, വചന വിശദീകരണം, മദ്ധ്യസ്ഥ പ്രാർത്ഥനകൾ
- ഓരോ നന്മനിറഞ്ഞ മറിയം പ്രാർത്ഥന, സമാപന പ്രാർത്ഥന, ആശീർവ്വാദം.
- വചനം തൊട്ടു വണങ്ങി കാണിക്ക സമർപ്പിക്കുന്നു or കാണിക്കപൊരുൾ
- റിപ്പോർട്ട് അറ്റന്റൻസ്, വിലയിരുത്തൽ ഒരു കാലിക വിഷയം ചർച്ച ചെയ്യുക.
- ദൗത്യം ഏറ്റെടുക്കുക, ലേലം നടത്തുക.
- പ്രതിജ്ഞ, നന്ദി പാടൽ കാപ്പി.............

## പ്രതിജ്ഞ

സർവ്വശക്തനായ ദൈവമേ എന്റെയും എന്റെ കുടുംബത്തിന്റെയും രക്ഷകനും, നാഥനും, ദൈവവുമായി ഞാൻ അങ്ങയെ സ്വീകരിക്കുകയും ഏറ്റു പറയുകയും ചെയ്യുന്നു. ഒരു കുടുംബത്തിന്റെ പിതാവായി എന്നെ ഉയർത്തിയതിൽ ഞാൻ അങ്ങേക്ക് നന്ദി പറയുന്നു. എന്റെ കുടുംബത്തെ ഞാൻ സ്നേഹിക്കുമെന്നും കുടുംബത്തിനായി എന്റെ ജീവിതം അർപ്പിക്കുമെന്നും ഞാൻ വാഗ്ദാനം ചെയ്യുന്നു. ഒരു കുടുംബനാഥന് നിരക്കാത്തതെല്ലാം ഞാൻ ഉപേക്ഷിക്കുമെന്ന് പ്രതിജ്ഞ ചെയ്യുന്നു. ദൈവ കല്പനകളും, തിരുസ്സഭകളുടെ കല്പനകളും അനുസരിച്ച് ജീവിച്ചു കൊള്ളാമെന്ന് ഞാൻ വാഗ്ദാനം ചെയ്യുന്നു. കുടുംബത്തിനും, സമൂഹത്തിനും, സഭയക്കും വേണ്ടി എന്റെ കഴിവുകൾ ഞാൻ വിനിയോഗിക്കുന്നതാണ്. തിരുക്കുടുംബത്തിന്റെ നാഥനും, തൊഴിലാളി മദ്ധ്യസ്ഥനുമായ വി. യൗസേപ്പിതാവിന്റെ മാദ്ധ്യസ്ഥം എനിക്ക് ലഭിക്കുമാറാകട്ടെ - ആമ്മേൻ.

Rev. Fr. Joseph Nedumpuram, Director



# வின்செண்ட் - தே - பவுல்
## தக்கலை மத்திய பேரவை

### அன்புடன் அழைக்கிறோம்

தக்கலை மத்திய சபையின் ஆண்டுவிழாவானது 17-05-2015 அன்று காலை 9.30 மணி முதல் படந்தாலுமூடு ஆடிட்டோரியத்தில் வைத்து நடைபெற உள்ளது. இவ்விழாவில் கலந்து கொள்ள வின்செந்திய சகோதரர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

### வாழ்த்தி செபிக்கிறோம்

நமது மத்திய சபையின் மூத்த துணைத் தலைவர் சகோ. சௌந்தர்ராஜ் அவர்கள் அகில இந்திய வின்செந்திய சபையின் துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டு பணியேற்றுக் கொண்டார்கள். இவர்களது தேர்வுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு பணி சிறக்க செபிக்கிறோம். இவர் தமிழ்நாடு வட்டார சபையின் செயலராகவும் தற்போது பணியாற்றி வருகிறார்.

### புதிய தலைவர் பதவியேற்பு

ஆறுகாணி புனித சிறுமலர் பெண்கள் கிளைச்சபை தலைவி சகோ. உஷா ஜோசப் அவர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து புதிய தலைவராக சகோ. லவ்லி ஜோஸ் அவர்கள் 22-03-2015 அன்று பணியேற்றுக் கொண்டார்கள். இந்நிகழ்வில் ஆறுகாணி வட்டார சபைத்தலைவர் சகோ. சுந்தர் ஜோஸ் மேலதில் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

# அருட்சகோதரர்களிடமிருந்து . . .

**புதிய அருட்தந்தையர்கள்:**

திருத்தொண்டர்கள் ஷோஜி, அஜிஸ், ஜோஸ், பிரின்டோ, வினோத், எபின் மற்றும் சுமேஷ் ஆகியோர்கள் உயிர்ப்பு முதல் வாரத்தில் ஆயர் அவர்களால் தங்களின் சொந்த பங்குகளில் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்கள். புதிய குருக்களின் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

**VBS ஆசிரியர்களுக்கான பயிற்சி**

VBS ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஏப்ரல் 24 மற்றும் 25 ஆகிய இருநாட்கள் நடைபெற்றன. திருத்தொண்டர் ஜெஸ்டின் அவர்கள் தலைமையில் உயர்குருமட அருட்சகோதரர்கள் இப்பயிற்சியை வழி நடத்தினார்கள். VBS பாடத்திட்டங்கள், பயிற்சிகள், விளையாட்டுகள், நடனங்கள் போன்ற நிகழ்வுகள் பயிற்றுவிக்கப்பட்டது. அனைத்து பங்குகளிலிருந்தும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். உயர்குருமட அருட்சகோதரர்கள் VBS பயிற்சியை பங்குகளில் மே 3 முதல் மே 16 வரை வழிநடத்துவார்கள்.

**களப்பணி பயிற்சி (Work camp)**

உயர்குருமட அருட்சகோதரர்களின் விடுமுறை களப்பணிப் பயிற்சி ஏப்ரல் 27 முதல் 30 வரை காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தில் நடைபெற்றது. காரோடு ஆண் மனநோயாளிகளுக்காக கட்டப்படும் புதிய கட்டிடத்தில் சுவர் எழுப்பும் பணியை அருட்சகோதரர்கள் செய்தனர். மேலும் தங்களின் குருமட அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். காரோடு பங்கு மக்களின் இல்லங்களை சந்தித்து அவர்களின் இன்ப துன்பங்களை கேட்டறிந்து அவர்களுக்காக செபித்தனர். ஆலயத்திருவிழாவிற்கான அலங்காரம், வரவேற்பு பதாகை மற்றும் நற்செய்தி பெருவிழா போன்ற நிகழ்வுகளை இனிதே ஒருங்கிணைத்து நடத்தினார்கள். இக்களப்பணிப் பயிற்சியை முன்னின்று நடத்திய அருட்தந்தை தோமஸ் தக்கலை, உணவு வசதிகள் செய்துதந்த காரோடு அருட்சகோதரிகள் மற்றும் பங்குமக்களுக்கும் எங்கள் நன்றி.

**சுற்றுலா & புதிய அருட்சகோதரர் தலைவர்**

அருட்சகோதரர்களின் சுற்றுலா மே 18 அன்று நடைபெறும். அருட்சகோதரர்களின் 2015-1016 ஆம் கல்வியாண்டின் புதிய தலைவராக அருட்சகோதரர் வினு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். புதிய அருட்சகோதரர் தலைவரின் பணி சிறக்க வாழ்த்துக்கள். இதுவரை என்னோடு உடனிருந்து உதவிய அனைத்து அருட்சகோதரர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தொண்டர் **அனில்ராஜ்,** அருட்சகோதரர் குழுத்தலைவர்



# விழுதுகள்-7

## கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்



ஈசோ தம் சீடர்களை நோக்கி ''உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற். 16:15) என்றார். இந்த கட்டளையை நிறைவேற்றும் வண்ணமாக நம் தந்தையாகிய மார் தோமையார் கி.பி. 52-ம் ஆண்டு இந்தியா வந்தார். மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் முற்றிலும் மாறுபட்ட மக்களிடத்தில்தான் தூய தோமையார், தாம் பெற்ற இறை அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

தோமையாரின் வழித்தோன்றலாக உருவான சீரோமலபார் திருச்சபையின் சங்ஙனாச்சேரி மறை மாநிலத்தின் தென் எல்லையான குமரி மண்ணில் 1960-இல் பேரருட்தந்தை முனைவர் தாமஸ் நங்கச்சிவீட்டில் அவர்கள் தலைமையில் மறைபரப்பு பணி ஆரம்பமானது. அவர் அருள்தந்தை சக்கரியாஸ் காயித்தற தலைமையில் நித்திரவிளையில் முதல் திருத்தொண்டு நிலையத்தை தொடங்கினார். தொடர்ந்து அருள்தந்தையர்கள் ஜோசப் மடத்திலும், தாமஸ் வீட்டு வேலிக்குன்னேல் அடிகளாரும் வந்தனர். அருள்தந்தை தாமஸ் முட்டத்துக்குன்னேல் அடிகளாரும் தமது பணியை காக்கவிளை (இன்றைய சூசைபுரம்) - யில் தொடங்கினர். இன்று சூசைபுரம் நமது மறைமாவட்ட ஆலயமாக செயல்படுகிறது. 1962 -ல் சேவிளை பொன்னுமுத்து வைத்தியர் அவர்கள் கறையான் குளத்திற்கு செல்லும் வழியில் தமக்குச் சொந்தமான பாறையில் வழிபாட்டிற்கு ஓலைக் குடிசை கட்ட அனுமதித்தார். இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் (மத். 16:18) என கூறியது போல, அன்றைய பேராயர் மார் மாத்யூ காவுகாட் ஆண்டகையின் அனுமதியோடு அருள்தந்தை தாமஸ் வீட்டு வேலிக்குன்னேல் அந்த பாறையின் மீது ஒரு ஓலைக் குடிசையைக் கட்டி திருப்பலியைத் தொடங்கினார். காலை, மாலை வேளைகளில் வேதபாடங்கள் கற்பிக்கப்பட்டன.



1962-ம் ஆண்டு ஜூலை 3-ம் நாள் காலஞ்சென்ற திருமதி. மரிய மதலேனாள் பாட்டிக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அதே மாதம் 22-ம் நாள் 6 பேருக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. பின்னர் திரு பொன்னுமுத்து வைத்தியரிடமிருந்து 22 சென்று நிலத்தை வாங்கிய அருள்தந்தை தாமஸ் வீட்டுவேலிக்குன்னேல் அடிகளார் கற்களால் ஒரு தேவாலயம் கட்டினார். தொடக்க காலத்தில் அருள்தந்தையர்களோடு பணியாற்றிய பலரது பணியும் இந்நேரத்தில் பாராட்டுதற்குரியது. அவர்களது அர்ப்பணமும் சேவை மனப்பான்மையும் தான், எமது தேவாலயத்தை பொன்விழா கொண்டாடும் நிலைக்கு உயர்த்தியுள்ளது. குறிப்பாக பிற மதத்தையும், மற்றும் பிற திருச்சபைகளையும் சார்ந்த அருள் கன்னியர்களும், பொதுநிலையினரின் ஒத்துழைப்பும் இச்சபை வளர்ச்சிக்கு அடிகோலின.

1969 ல் பேராயர் மாத்யூ காவுகாட் அவர்கள் மறைவைத் தொடர்ந்து பொறுப்பேற்ற பேராயர் மார் ஆன்டனி படியற காலம் ஒரு சிறப்பான காலமெனலாம். காரணம் அவர் பலமுறை நேரடியாக இச்சிற்றாலயத்திற்கு வந்து ஆலய வளர்ச்சிக்கு உதவினார். 1983 இல் நிறுவனத்தந்தை தாமஸ் வீட்டு வேலிக்குன்னேல் காலமானதைத் தொடர்ந்து அவரோடு பணியாற்றிய அருள்தந்தை தாமஸ் முட்டத்துக்குன்னேல் அடிகளாரும், அவரைத் தொடர்ந்து அருள்தந்தை மாத்யூ வாக்கேல் அடிகளாரும் பங்குத்தந்தையர்களாகப் பணியாற்றினார்கள். மேலும் பல உதவிப் பங்குத்தந்தையர்களின் பணியும் அளவிடற்கரியது.

அருள்தந்தை குரியன் புத்தன்புர அடிகளார் பங்குத்தந்தையாக பணியாற்றிய போது தான் தற்போதைய ஆலயத்தின் தரைத்தளம் மற்றும் வளாகத்தைச் சுற்றிலும் மதிற்சுவரும், குருசடியும் கட்டப்பட்டது. இவ்வாலய



கட்டடம் கட்டப்பட்டுள்ள சுமார் இரண்டு ஏக்கர் பரப்புள்ள இடம் காலஞ்சென்ற திரு பீமன் நாடார் அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. பின்னர் அதனைச் சுற்றியுள்ள பல நிலங்கள் பல்வேறு நபர்களிடமிருந்து பல்வேறு காலகட்டங்களில் விலைக்கு வாங்கப்பட்டதாகும்.

ஆலய தரைதளக் கட்டடம் பேராயர் கர்தினால் ஆன்றனி படியற அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப்பட்டதாகும். தனிப்பங்கு நிலைக்கு உயர்த்தப்பட்டபின் முதல் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டவரும் இந்த அருள்தந்தை குரியன் புத்தன்புர அவர்களே ஆவார். அவர் இவ்வாலய கட்டடத்தின் பின்பகுதியில் கட்டப்பட்டுள்ள குருக்களுக்கான இல்லத்தில் தங்கி பணியாற்றி வந்தார். இவரைத் தொடர்ந்து பணிக்காலத்தில் ஆனக்குழியில் ஒரு பாலர்சபைக்கான கட்டடம் கட்டப்பட்டதும், கல்லறைத் தோட்டத்திற்கு ஒரு இடம், கண்டுகொண்டான் மாணிக்கத்துவிளைக்கு அருகில் வாங்கப்பட்டதும் ஆகும். அவரைத் தொடர்ந்து அருள்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் பணிப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கன்னியாகுமரி திருத்தொண்டு நிலையமாக செயல்பட்டு வந்த குமரி மிஷன், திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களின் அபுத் இந்தோரம் எம்னும் ஆணைப்படி தக்கலை சீரோ மலபார் கத்தோலிக்க மறைமாவட்டம் 1996 ல் உதயமானது. அதுவரை பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் குமரி மிஷனை வழிநடத்தி வந்தார். தக்கலை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி பொறுப்பேற்றுக் கொண்டார். தக்கலை மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆலயமாக மேல்தளத்தில் இன்று புதுப்பொலிவுடன் காணப்படும் இவ்வாலயம் அருள்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் பணிக்காலத்தில் சிறப்புடன் கட்டப்பட்டது. ஆலயத்தின் முன்பக்கமுள்ள இடமும் வாங்கப்பட்டது. கீழ்தள கட்டடம் சமூக நலக்கூடமாக பயன்படுத்தப்பட்டது. பங்கு பிரதிநிதி மன்றமும், குடும்ப கூட்டமைப்புகளும் தொடங்கப்பட்டது. அது முதல் இப்பங்கிலிருந்து பல்வேறு நபர்கள் மறைமாவட்ட மன்றத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்டும், நியமிக்கப்பட்டும் செயலாற்றி வருகின்றனர். மறைமாவட்டத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் இப்பங்கின் பிரதிநிதித்துவம் உள்ளது என்பது இப்பங்கின் மற்றுமொரு சிறப்பு. அந்த காலகட்டத்தில் தான் ஆராதனை கன்னியர் இல்லம் இங்கே நிரந்தர கட்டடத்தில் செயல்படத் தொடங்கியது. அதில்

ஜோதி நிலையம் என்ற மனவளர்ச்சி குன்றிய மாணவ மாணவியருக்கான பாடசாலை சிறப்புடன் சிறப்புடன் செயல்படுகின்றது. தொடர்ந்து அருள்தந்தை யேசுதாஸ் சீராம்பள்ளி அவர்கள் பணியாற்றினார். அப்போது ஆலய கட்டடம் வர்ணம் பூசப்பட்டு புதுப்பொலிவு பெற்றது. தொடர்ந்து பணிப்பொறுப்பேற்ற அருள்தந்தை முளங்நாசேரில் காலத்தில் சமூக நலக்கூடத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டது. அவரைத் தொடர்ந்து அருள்தந்தை சினோஜ் காருபிளாக்கில் சிறப்புடன் பணியாற்றினார். அவரது மாறுதலுக்குப்பின் அருள்தந்தை தாமஸ் பாலக்காட் அவர்கள் பணிப்பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது காலத்தில் ஆலயத்தின் உட்பக்கம் தரையில் கிரானைட் கற்கள் பதித்ததோடு, ஜெனரேட்டரும் வாங்கப்பட்டது. இவ்வாலயத்தில் மறைக்கல்வி, புனித வின்சென்ட் தே பவுல் சபை, மாதர் ஜோதிஸ், மரியாயின் சேனை, இளைஞர் இயக்கம், மிஷன் லீக், குழந்தை ஈசோ இயக்கம், பாலர் சபை போன்ற பல்வேறு பக்த இயக்கங்கள் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. தொடக்க காலமுதல் இன்றளவும் ஆராதனை கன்னியர் இல்ல அருள் சகோதரிகளின் பணி பாராட்டுதற்குரியது.

தக்கலை மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக பொறுப்பேற்றிருக்கும் ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலோடு இவ்வாலயம் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. அருள்தந்தை ஜியோ சுழிக்குன்னேல் அடிகளார் தலைமையில் ஆலய பொன்விழாவானது சிறப்புடன் கொண்டாடப்பட்டது. பொன்விழாவானது 2012 ஜூலை 3 ம் நாள் தொடங்கி பல்வேறு நிகழ்வுகளுடன் நவம்பர் மாதம் நடைபெற்ற திருவிழாவோடு நிறைவடைந்தது. பொன்விழா நினைவாக புதிய கொடிமரமும், கற்சிலுவையும் நாட்டப்பட்டுள்ளது. அருள்தந்தையர்கள் தங்கும் வீடும் கட்டப்பட்டது.

எமது பங்கை தற்போது அருள்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அடிகளார் சிறப்புடன் வழிநடத்தி வருகிறார்கள். பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றது. மராமத்துப் பணிகள் பலவும் இவரது பணிக்காலத்தில் நடைபெறுகின்றன. புதிய குருசடி கட்டுமானப் பணிக்கான தயாரிப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. எல்லா மாதமும் மூன்றாவது சனிக்கிழமை கிறிஸ்து அரசர் தியான மையம் என்னும் பெயரில் சூசைபுரம் மறைவட்ட மக்களின் ஒத்துழைப்போடு தியானம் நடைபெறுகின்றது.



இவ்வாலயத்தின் தொடக்கம் முதல் இன்றளவும் இறைபணியாற்றிய அருள்தந்தையர்கள், அருள்கன்னியர்கள், பொது நிலையினர் மற்றும் உதவிகள் பல செய்த அனைவரையும் நன்றியுடன் நினைக்கின்றோம். இவர்களில் உயிர்நீத்தவர்களுக்காகவும் செபிக்கின்றோம். மேலும், இப்பங்கானது மிகப்பெரிய வளர்ச்சியடைந்து இந்தப் பகுதி மக்களுக்கும், தக்கலை மறைமாவட்ட மக்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டான பங்காக மாறட்டும் என மனதார வாழ்த்துகிறேன். இறைவனுக்கு நன்றி.

இவண்,

திரு. **மரியதாஸ்** ஆசிரியர்.

---

## கல்விப் பணித்தளம்

இக்கல்வியாண்டில் நடைபெற்ற +2 தேர்வில் குமரி மாவட்டத்தின் முதல் 3 இடங்களில் முறையே 1186, 1183, 1181 மதிப்பெண் பெற்றதோடு, கடந்த 6 ஆண்டுகளாக குமரி மாவட்டத்தில் முன்னிலையில் இருக்கும் தூய அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.

**மறைமாவட்ட பள்ளிகளில் மேல்நிலை பொதுத்தேர்வில் மதிப்பெண் பெற்ற விபரம்**

| இடம் | பள்ளியின் பெயர் | எழுதியவர் | தேர்ச்சி | முதல் மதிப்பெண் |
|---|---|---|---|---|
| நாகர்கோவில் | தூய அல்போன்சா | 274 | 274 | 1186 |
| சூசைபுரம் | APJM | 53 | 53 | 1105 |
| படந்தாலுமூடு | திருஇருதயம் | 104 | 103 | 1155 |
| கன்னியாகுமரி | கார்மல் மாதா | 49 | 49 | 1121 |
| செங்கோட்டை | தூய சூசையப்பர் | 50 | 50 | 1142 |
| முக்கூட்டுக்கல் | திருக்குடும்பம் | 103 | 101 | 1064 |
| களியல் | தூய மரியன்னை | 181 | 175 | 1114 |

வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு வாழ்த்துக்கள். அதற்காக உழைத்த நிர்வாகிகள், தலைமையாசிரியர்கள், ஆசிரிய பெருமக்கள், ஒத்துழைத்த பெற்றோர்கள் அனைவருக்கும் மறைமாவட்டம் சார்பில் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

# இனிய இருநூறு...

## தொன் போஸ்கோ பிறப்பின் இருநூறாவது ஆண்டு (1815-2015)

ஏழை குடும்பத்தில் பிறந்து, இரண்டு வயதிலேயே தந்தையை இழந்து, படிக்க வசதி வாய்ப்பின்றி, வேலை செய்துகொண்டே (தச்சராக, தையல்காரராக, செருப்பு தைப்பவராக, உணவு விடுதியில் மேசை துடைப்பவராக... ) படித்து, இளைஞர்களுக்காக தன்னையே குருவாக அர்ப்பணித்து, இறுதி மூச்சு வரை உழைத்த தொன்போஸ்கோவின் பிறப்பின் இருநூறாவது ஆண்டு விழா




1815 ஆகஸ்டு 16 ஆம் தேதி இளைஞர்களுக்குத் தந்தையான, நண்பனான தொன் போஸ்கோ இத்தாலி நாட்டில் தூரின் நகரில், பெக்கி என்னும் சிற்றூரில் பிறந்தார். இவருடைய பிறப்பின் இருநூறாவது ஆண்டினை அர்த்தமுள்ளதாக கொண்டாட மூன்றாண்டுகள் தயாரிப்பினை மேற்கொள்ள முன்னாள் சலேசிய சபை தலைவர் அருட்தந்தை பாஸ்கல் சாவஸ் அடிகளார் அறைகூவல் விடுத்தார். ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் சிந்திக்கவும், செயல்பாடுகள் மேற்கொள்ளவும் தூண்டினார்.

### முதல் ஆண்டு தயாரிப்பு:

**தொன் போஸ்கோவின் வரலாறு** (16.8.2011 - 16.8.2012)

இந்த ஆண்டில் தொன் போஸ்கோவின் வரலாறையும் அவர் வாழ்ந்த சூழலையும், அவருடைய அனுபவங்களையும் அறிந்து கொண்டால், நாம் அவரை இன்னும் அதிகமாக அன்பு செய்ய முடியும். இக்கால சூழலில் அவரின் பணியை தொடர இயலும். எனவே முறையான அறிவியல் அணுகுமுறையோடு தொன் போஸ்கோவை அறிந்து கொள்ள இவ்வாண்டு திட்டம் வழிசெய்தது.



### இரண்டாம் ஆண்டு தயாரிப்பு:

**தொன்போஸ்கோவின் கல்விமுறை** (Pedagogy) (16.8.2012-16.8.2013)

தொன்போஸ்கோ வாழ்ந்து, அனுபவித்து விட்டுச் சென்ற இக்கல்வி முறையை நன்கறிந்து வளர்ந்து வரும் சூழலுக்கேற்ப கல்விமுறையை வடிவமைக்கவேண்டும். தொன்போஸ்கோவின் கல்விமுறை எந்த தலைமுறைக்கும் ஏற்ற சிறந்த கல்விமுறை “தடுப்பு முறைக்கல்வி“. இதனுடைய அடிப்படையாக உள்ள அறிவு, அன்பு, இறை நம்பிக்கை இந்த மூன்றையும் கொண்டு, மகிழ்ச்சியில் புனிதத்தை விதைத்து வாழ இவ்வாண்டு திட்டம் தூண்டியது.

### மூன்றாம் ஆண்டு தயாரிப்பு :

**தொன் போஸ்கோவின் ஆன்மிகம்** (16.8.2013 -16.8.2014)

இறுதி ஆண்டு தயாரிப்புக்காக தொன் போஸ்கோவின் ஆன்மீகத்தை அறிதலும் வாழ்வாக்கலும். தொன் போஸ்கோவின் வரலாற்றையும், கல்வி முறையையும் மட்டும் அறிதல் முழுமையாகஇருக்காது. அவருடைய ஆழமான ஆன்மீகத்தை புரிந்துக் கொண்டால் மட்டுமே அவருடைய வாழ்வையும், கல்வி முறையையும் முழுமையாக புரிந்து கொள்ள முடியும். ஒருவருடைய வாழ்க்கையும் செயல்பாடும் அவரவர் ஆன்மீகத்தை பொறுத்தே அமையும். ஆகவே இந்தாண்டு முழுவதும் ஆன்மீகத்தை அறிந்து கொள்ளவும் வாழ்க்கையாக மாற்றவும் அர்ப்பணிக்கப்பட்டது.

### இருநூறாவது ஆண்டு கொண்டாட்டம் (16.8.2013 -16.8.2014)

தொன்போஸ்கோவின் திருப்பண்டம் உலகமெங்கும் பவனி வந்தது ஒரு தயாரிப்பாகவும் கொண்டாட்டமாகவும் அமைந்தது. இந்த கொண்டாட்டத்தின் ஆண்டிலே வரலாறை அறிய தொன்போஸ்கோவின் வரலாறும் உலக மாநாடும் (19 நவம்பர் 2014 முதல் 23 நவம்பர் 2014) கல்வி முறையை அறிய தொன்போஸ்கோவின் கல்வி முறையும் உலக மாநாடும் (14 மார்ச் 2015 முதல் 21 மார்ச் 2015) சலேசிய உள்ளுணர்வுகளை பகிர சலேசிய ஆயர்களின் கூடுகையும் (21 மே 2015 முதல் 25 மே 2015) அமைந்துள்ளது. இந்த ஆயர்களின் கூடுகையில் நமது ஆயரும் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

மேலும் இறுதி கொண்டாட்டமாக இளைஞர்கள் இளைஞர்களுக்காக என்ற தலைப்போடு இளைஞர்களுக்கான உலக

மாநாடு 2015 ஆகஸ்ட் 11 முதல் 16 வரை நடைபெற உள்ளது. மாநாட்டின் நிறைவில் 16 ஆம் தேதி அன்று தொன்போஸ்கோவின் பிறப்பின் இருநூறாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட உள்ளது. இவ்வாறு இன்றைய இளையோருக்காக இளைஞருடன் தொன்போஸ்கோவின் மன நிலையோடு வாழ, பணி செய்ய, இந்த தயாரிப்புகளும் கொண்டாட்டங்களும் உதவிட கரம் கோர்த்து ஜெபிப்போம்.

வாழ்க தொன்போஸ்கோ!

***Fr. பெலிக்ஸ்,*** SDB

---

## தூய மரிய கொரற்றி மழலையர் பள்ளி ஆண்டுவிழா



அதங்கோடு தூய மரியகொரற்றி மழலையர் பள்ளியின் 37-ம் ஆண்டுவிழா ஏப்ரல் 21 செவ்வாய் அன்று காலை 10.00 மணியளவில் தாளாளர் அருட்தந்தை டோஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடக்கத்தில் மழலையர்பள்ளி மாணவர்களின் செயல்திட்ட கண்காட்சி நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற ஆண்டுவிழா பொதுக்கூட்டத்தில் திருமதி ஜெயா அவர்கள் வரவேற்புரை வழங்க, மழலையர் பள்ளி ஆசிரியர் திருமதி ஸ்டெல்லா அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார். தொடர்ந்து மறைமாவட்ட மழலையர் பள்ளி ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மரியா அவர்கள் சிறப்புரை வழங்கினார். தொடர்ந்து மழலையர் பள்ளி சிட்டுகளின் நடனம், பாட்டு போன்ற கலைநிகழ்ச்சிகளும், பெற்றோர்களின் கோலாட்டமும் நடைபெற்றது. தொடர்ந்து தாளாளர் அருட்தந்தை டோஜி அவர்கள் தலைமையுரையாற்றி, ஏப்ரல் 17 அன்று நடைபெற்ற கலை மற்றும் விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற மழலையர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பரிசுகளை வழங்கினார்.தொடர்ந்து திருமதி. சுபிதா அவர்கள் நன்றியுரை கூற அன்பு விருந்துடன் மதியம் 1.30 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.

திருமதி **ஸ்டெல்லா**, ஆசிரியை



## BISHOP'S ENGAGEMENTS May 2015

| | | |
|---|---|---|
| Friday 1 | 6.00-8.00am | Athirampuzha: Orientation for SABSKakkanad |
| Saturday 2 | 7.00am | Judapuram Church: 10th Anniversary |
| Sunday 3 | 8.30am | Mukkoottukal Golden Jubilee |
| Monday 4 | | Pastoral Council -Session 2 |
| Tuesday 5 | 11.00am | KKSSS GB meeting |
| Wednesday 6 | 10.00am | Bishop's House: Reception to Anniamma SABS |
| Thursday 7 | 7.30am | Edathua: Tamil Mass |
| Friday 8 | 5.00pm | Appattuvilai: Church Blessing |
| Saturday 9 | | Bishop's House |
| Sunday 10 | 6.00pm | Gana Mela |
| Monday 11 | 9.30-11.00am | Curia MeetingPalukal: Marriage |
| From Tuesday 12 To Wednesday 27 | | Europe Visit |
| Thursday 28 | | Inter-Diocesan Meet, Thuckalay |
| Friday 29 | | First Holy Communion |
| Saturday 30 | | Christurajapuram church: Consecration |
| Sunday 31 | | Anamukham: Pastoral Visit |

Fr. K. J. Antony SDB
*Diocese Secretary*

இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு
iraiarultkly@gmail.com